# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 13.10.2025**

**அசல் வழக்கு எண். 227/2018**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல்துறையில் துணைக்கண்காணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேனா என்றால் நான் காவல்துறையில் கூடுதல் கண்காணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். இவ்வழக்கின் பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் பெயர் செல்லையாபாண்டியனா என்றால் எனது தகப்பனார் பெயர் செல்லையாபாண்டியன்தான். அவரை விக்டர் செல்லையா என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் மரியம்மாள் என்றால் சரிதான். எனது தாயார் பணிபுரிந்தாரா என்றால் எனது தாயார் பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாக பணிபுரிந்தார். எனது தாயார், எனது தந்தை மற்றும் அவர்களது முன்னோர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல. எனது தாத்தாவின் பெயர் ராமசாமிதேவர் என்றால் சரிதான்.

2. நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் பிராதுடன் 19.12.1932 தேதியிட்ட பதிவு உயில் ஆவணத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். மேற்படி உயில்ஆவணம் எனது தாத்தா ராமசாமிதேவரால் எழுதிவைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் ஒவ்வொரு பயனாளிகளும் எந்த மதத்தை சார்ந்தவர்கள் என்று தனித்தனியே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தின் பயனாளிகளுள் ஒருவரான மைனர் செல்லையாவும், அவரது தாயாரும் கார்டியனுமான

அன்னப்பூரணத்தம்மாளும் எந்த மதத்தை சார்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தை இறந்தபிறகு அவரை எந்த மதப்படி அடக்கம் செய்தார்கள் என்றால் கிறித்துவ மதப்படி அடக்கம் செய்தார்கள். மேற்படி அன்னபூரணத்தம்மாள் எந்த மதத்தை சார்ந்தவர் என்றால் இந்து மதத்தை சார்ந்தவர். எனது தாயார் மரியம்மாள் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் மரியம்மாள் அவரது இறப்பிற்குபிறகு கிறித்துவ முறைப்படி அடக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். நான் விக்டர் செல்லையா பெயரில் கிறித்துவ டிரஸ்ட் ஆரம்பித்து அரசாங்கத்திலிருந்து அதற்கு சலுகைகள் பெற்றேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் விக்டரி டிரஸ்ட் என்ற டிரஸ்ட் உண்டா என்றால் எனக்கு தெரியாது.

3. நானும், எனது சகோதரர்களும் எந்த மதத்தை சார்ந்தவர்கள் என்றால் நான் இந்து மதத்தை சார்ந்தவன். எனது சகோதரர்கள் எந்த மதத்தை கடைபிடிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் மற்றும் தாயார் கிறித்துவ மதத்தை சார்ந்தவர்களா என்றால் எனது தந்தை இந்து மதத்தை சார்ந்தவர். எனது தாயார் கிறித்துவமதத்திற்கு மாறியவர். எனது பள்ளிச்சான்று மற்றும் பணிப்பதிவேடு ஆகியவற்றில் நான் எந்த மதத்தை சார்ந்தவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது பள்ளிச்சான்றில் நான் கிறித்துவ மதத்தை சார்ந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது பணிப்பதிவேட்டில் நான் இந்து மதத்தை சார்ந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4. எனது தாயாருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்கள் உண்டா என்றால் உண்டு. எனது தகப்பனார் அரசாங்க வேலை செய்தாரா என்றால் எனது தகப்பனார் காவல்துறையில் பணிபுரிந்தார். 1965 ல் எனது

தகப்பனார் இறந்துவிட்டார். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் எவ்வளவு உண்டு என்றால் சுமார் 8 ஏக்கர் நிலம் உண்டு. ஒரு பூர்வீக வீடும் எனது தந்தைக்கு உண்டு. அந்த சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார் யாருக்கேனும் ஆவணம் ஏதும் பிறப்பித்துக்கொடுத்தாரா என்றால் இல்லை. எனது தகப்பனாரின் மேற்படி சொத்துக்கள் எனது சகோதரர்களுக்கும் எனக்கும் இடையில் பிரிவினை செய்யப்பட்டதா என்றால் 2000ம் வருடத்தில் எனக்கும் எனது சகோதரர்களுக்கும் இடையில் பிரிவினை செய்யப்பட்டது.

5. பிராது தபசில் சொத்துக்கள் அனைத்தும் எனது தாயார் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்கள் பிரிவினைக்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் எனது தகப்பனார் மற்றும் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள். பிராது தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 7 அயிட்ட சொத்துக்களுள் எந்த சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றும், எனது தாயாருக்கு எந்த சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றும் என்னால் கூறமுடியுமா என்றால் கூற இயலாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிராது தபசில் சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிராது தபசில் சொத்துக்கள் பிரிவினைக்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் கூறியுள்ள விபரம் உண்மையானதா அல்லது தற்போது சாட்சியம் அளித்துள்ள விபரம் உண்மையானதா என்றால் வழக்குரையில் கூறியுள்ள விபரம் சரியானது.

6. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள

எதிர்வழக்குரையில் பிராது தபசில் சொத்துக்கள் 1958, 1959, 1960 மற்றும் 1968 ஆகிய வருடங்களில் மரியம்மாள் என்பவரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்கள் எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டவாறு 1958, 1959, 1960 மற்றும் 1968 ஆகிய வருடங்களில் மரியம்மாள் என்பவரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்துக்கள் மரியம்மாள் என்பவரால் மட்டும்கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் இல்லை. அந்த சொத்துக்கள் எனது தகப்பனாராலும் சேர்ந்து வாங்கப்பட்ட சொத்துக்கள். எனது தந்தை அரசு வேலையில் இருந்ததால் எனது தாயாரின் பேரில் சொத்துக்கள் வாங்கினார். மேற்படி விபரத்தை எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து அவரால் பிறப்பிக்கப்பட்ட உயில் ஆவணத்தை அவரே ரத்து செய்தார் என்றால் சரிதான். எனது தாயார் எந்த வருடத்தில் மேற்கூறியவாறு உயில் ஆவணத்தை ரத்து செய்தார் என்றால் குறிப்பான வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாயார் இறப்பதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு உயில் ஆவணத்தை ரத்து செய்திருக்கலாம். எனது தாயார் எப்போது இறந்தார் என்றால் 2019 ம் வருடம் இறந்தார்.

7. எங்களது அனைத்து குடும்ப சொத்துக்கள் பொறுத்தும் எந்த ஆண்டு யார் முன்னிலையில் வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொள்ளப்பட்டது என்றால் 2000 ம் வருடத்தில் ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் சங்கரபாண்டியன் (தற்போது உயிருடன் இல்லை) மற்றும் நாட்டாமை சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையிலும், மற்ற ஊர் பெரியவர்கள் முன்னிலையிலும் எனக்கும், எனது சகோதரர்களுக்கும் இடையில்

வாய்மொழிப்பாகப்பிரிவினை செய்துகொள்ளப்பட்டது. மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் எனக்கு எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டது என்றால் சுமார் 3 ஏக்கர் இடம் ஒதுக்கப்பட்டது. மேற்படி 3 ஏக்கரில் எவ்வளவு விஸ்தீரணம் உடைய இடம்எ னது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், எவ்வளவு விஸ்தீரணம் உடைய இடம் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது. பிராது தபசில் சொத்துக்கள் மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களாக நான் இவ்வழக்கில் கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்கள் மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்டனவா என்றால் வேறு சொத்துக்கள் ஒதுக்கப்படவில்லை. எனக்கும் எனது சகோதரர்களுக்கும் தவிர்த்து வேறு நபர்களுக்கு மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் சொத்துக்கள் எதுவும் ஒதுக்கப்பட்டனவா என்றால் இல்லை.

8. எனது தாயார் அவர் பெயர் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களை பல நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் 3ம் பிரதிவாதியான சுதாகர் மற்றும் கத்தோலிக் சர்ச் ஆகிய இரண்டு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார். எந்த வருடத்தில் மேற்கூறிய இரண்டு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது தாயார் அவர் கிரையம் பெற்ற சொத்துக்களை பொறுத்து 2007ம் வருடம் எனது பெயருக்கு ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்கூறியவாறு 3ம் பிரதிவாதியான சுதாகர் மற்றும் கத்தோலிக் சர்ச் ஆகிய இரண்டு நபர்களுக்கு அளிக்கப்பட்ட கிரையம் வாய்மொழி பாகப்பிரிவினைக்கு முன்பு அளிக்கப்பட்டதா அல்லது பின்பு

அளிக்கப்பட்டதா என்றால் வாய்மொழி பாகபிரிவினைக்கு பின்பு அளிக்கப்பட்டது. பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து பிறப்பிக்கப்பட்ட பட்டா தற்போது வரை மரியம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து பிறப்பிக்கப்பட்ட பட்டா தற்போதுவரை எனது தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயரிலிருந்து எனது தாயார் பெயருக்கு பட்டா மாற்றம் ஏற்பட்டுவிட்டது. எனது தந்தை, எனது தாயார், நான் மற்றும் எனது சகோதரர்கள் ஆகிய அனைவரும் கிறித்துவ மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக நாங்கள் அனைவரும் கிறித்துவ மதத்தை சார்ந்தவர்கள் என்பதைமறைத்து இந்து மதத்தை சார்ந்தவர்கள் என்று பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் உள்ள விபரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களும், வேறு சொத்துக்களும் எனது தாயார் மரியம்மாளால் சுயார்ஜிதமாக கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்கள் இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் எனது வழக்குரையில் பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்கள் மற்றும் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்கள் பொறுத்து எந்த காலத்திலும் எந்த வகையிலும் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களில் எனக்கு தனித்த உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. மோசடி ஆவணங்களை உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விளம்புகை

பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும், பிராது தபசில் சொத்துக்கள் பொறுத்து எனது தாயார் எவ்வித ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டதால் பிரதிவாதிகளுக்கும் அவற்றில் உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. எனது சகோதரி ரெஜினாள்ஜெபக்கனி என்பவரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**